# செப்டம்பர் – 28 – வெள்ளி

**புனித வென்சலாஸ்**

**“நீா் மெசியா’’ (லூாக். 9:20)**

**முதல் வாசகம் : சபை உரையாளர் 3 : 1 – 11**

ஒவ்வொன்றுக்கும் ஒருநேரமுண்டு. உலகில் நடக்கும் ஒவ்வொரு நிகழ்ச்சிக்கும் ஒருகாலமுண்டு. பிறப்புக்கு ஒருகாலம், இறப்புக்கு ஒருகாலம் நடவுக்கு ஒருகாலம், அறுவடைக்கு ஒருகாலம் கொல்லுதலுக்கு ஒருகாலம், குணப்படுத்தலுக்கு ஒருகாலம் இடித்தலுக்கு ஒருகாலம், கட்டுதலுக்கு ஒருகாலம் அழுகைக்கு ஒரு காலம், சிரிப்புக்கு ஒருகாலம் துயரப்படுதலுக்கு ஒருகாலம், துள்ளி மகிழ்தலுக்கு ஒருகாலம் கற்களை எறிய ஒருகாலம், கற்களைச் சேர்க்க ஒருகாலம் அரவணைக்க ஒருகாலம், அரவணையாதிருக்க ஒருகாலம் தேடிச் சேர்ப்பதற்கு ஒருகாலம், இழப்பதற்கு ஒருகாலம் காக்க ஒருகாலம், தூக்கியெறிய ஒருகாலம் கிழிப்பதற்கு ஒரு காலம், தைப்பதற்கு ஒருகாலம் பேசுவதற்கு ஒருகாலம், பேசாதிருப்பதற்கு ஒருகாலம் அன்புக்கு ஒருகாலம், வெறுப்புக்கு ஒருகாலம் போருக்கு ஒருகாலம், அமைதிக்கு ஒருகாலம். வருந்தி உழைப்பவர் தம் உழைப்பினால் அடையும் பயன் என்ன? மனிதர் பாடுபட்டு உழைப்பதற்கெனக் கடவுள் அவர்மீது சுமத்திய வேலைச் சுமையைக்கண்டேன். கடவுள் ஒவ்வொன்றையும் அதனதன் காலத்தில் செம்மையாகச் செய்கிறார் காலத்தைப் பற்றிய உணர்வை மனிதருக்குத் தந்திருக்கிறார். ஆயினும், கடவுள் தொடக்கமுதல் இறுதிவரை செய்துவருவதைக் கண்டறிய மனிதரால் இயலாது.

**பதில்பாடல் :** என் பாறையாகிய அண்டவர் போற்றி போற்றி

**நற்செய்தி : லூக்கா 9 : 18 – 22**

அக்காலத்தில் இயேசு தனித்து இறைவனிடம் வேண்டிக் கொண்டிருந்தபோது சீடர்மட்டும் அவரோடு இருந்தனர். அப்போது அவர்களிடம், ”நான்யார் என க்கள் சொல்கிறார்கள்?” என்று அவர் கேட்டார். அவர்கள் மறுமொழியாக, ”சிலர் திருமுழுக்கு யோவான் எனவும் வேறு சிலர் எலியா எனவும் மற்றும் சிலர் முற்காலத்து இறைவாக்கினருள் ஒருவர் உயிர்த்தெழுந்துள்ளார் எனவும் சொல்கின்றனர்” என்றார்கள். ”ஆனால் நீங்கள் நான் யார் என சொல்கிறீர்கள்?” என்று அவர்களிடம் அவர்கேட்டார். பேதுரு மறுமொழியாக, ”நீர் கடவுளின் மெசியா” என்று உரைத்தார். இதை யாரிடமும் சொல்லவேண்டாம் என்று அவர்களிடம் அவர் கண்டிப்பாய்க் கூறினார். மேலும் இயேசு, ”மானிடமகன் பலவாறு துன்பப்படவும் மூப்பர்கள், தலைமைக் குருக்கள், மறைநூல் அறிஞர் ஆகியோரால் உதறித் தள்ளப்பட்டுக் கொலை செய்யப்படவும் மூன்றாம் நாளில் உயிருடன் எழுப்பப்படவும் வேண்டும்” என்று சொன்னார்.

**தியானம் :** நமது வாழ்க்கைப் பயணத்தில் வேதனையும், துன்பமும் அனுபவிக்க நாம் அழைக்கப்படுகின்றோம். இது கடவுள் எம்மேல் வைத்துள்ள அன்பினால் எமக்கு அவைகள் வர அனுமதிக்கிறார். முதல் வாசகம் அதை எமக்கு விளக்குகிறது. அதாவது ஒவ்வொன்றிற்கும் ஒரு காலமுண்டு. நாங்கள் விரும்பினாலும விரும்பாவிட்டாலும் நேரமும் காலமும் ஒடிக்கொண்டே இருக்கும். கடவுள் அனைத்தையும் அதற்கேற்ப காலத்தில் நடைபெற அனுமதிக்கிறார். கடவுள் என்னை அன்பு செய்கின்றார் என்று நான் எப்படிக் காண்கிறேன்? பலருக்கு அவர்களின் தேவையை சந்திக்கும் பொழுது அவர்களை அன்பு செய்கிறார் என நினைக்கிறார்கள். நற்செய்தியில் இயேசு கேட்கும் கேள்விக்கு யூதர்கள் என்ன சொல்கிறார்கள் என்ற கேள்விக்கு பதிலளித்த சீடர்களிடம் நீங்கள் என்னை யார்? என்று சொல்கிறீர்கள் என்று கேட்கிறார். உடனடியாக பேதுரு நீர் கடவுளின் மெசியா என்று கூறுகிறார். ஆம் மெசியா துன்புறும் ஊழியர். ஏனென்றால் மனுக்குலத்தின் மேல் கடவுளின் அன்பு பொழியப்படுவதால் அன்பார்ந்த மகனும் துன்பப்பட வேண்டியதாயிற்று. கடவுள் எம்மேல் வைத்துள்ள அன்பின் நிமித்தம் எமக்கு ஏற்படுகின்ற இன்ப துன்பங்களோடு இயேசு யார் என்பதை நாங்கள் உய்த்துணர வேண்டும். அவருக்கும் எனக்கும் உள்ள உறவின் ஆளத்தின் வழியாகவே இயேசு மெசியா என்பதை நாம் அறிக்கையிட முடியும்.